# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 18.09.2019**

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2752/A/2018**

திரு ஓ. ஆறுமுகம்
த/பெ ஒளிமுத்து . மேல்முறையீட்டாளர்
எண்.47, அசோகபுரம் தெரு
கருங்குளம்
திருநெல்வேலி - 627 356

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர்
முதன்மை மாவட்ட நீதிபதி
முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திருநெல்வேலி. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (18.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு ஓ. ஆறுமுகம் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7 (1)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு,V. சங்கர நாராயணன், Executive Assistant, முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி, ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் 31/01/2019 தேதியிட்ட மனுவில், மாவட்ட நீதிமன்றத்தில் பணிபரிய நியமிக்கப்படும் அடிப்படை பணியாளர்களான நீதிமன்ற ஊழியர்கள் நேர்முகத் தெர்வு முறையில் மட்டும்தான் நியமிக்கப்படுவார்களா ?

அல்லது வேறு ஏதேனும் தேர்வு முறைகள் உண்டா என்று கேட்டும், அடிப்படை பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், தோட்டக்காரர், துப்புறவு பணியாளர், இரவுக் காவலர் மற்றும் தட்டச்சர் போன்ற பணியிடங்களை மாவட்ட நீதிபதி அதிகாரத்தில் மட்டும்தான் நியமிக்கப்பட வேண்டுமா, வேறு ஏதேனும் கருணை அடிப்படையில் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதா என்றும், இவ்வாறு பணியமர்த்தப்படும் நபர்களின் பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்வது தேர்வில் முறையில் இடம் பெறுமா என்றும், இதுபோன்ற தகவல்களை 1 முதல் 6 இனங்களில் வழங்கக் கேட்டு பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட நீதிபதி, மாவட்ட நீதிமன்ற வளாகம், பாளையங்கோட்டை அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். இதுகுறித்து 05/02/2019 தேதியிட்டு முதன்மை மாவட்ட நீதிபதி, திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தில், இனம் வாரியாகத் தகவல்களை அளித்துள்ளார். அதில், இனம் 1-க்கு தமிழ்நாடு அடிப்படை சேவை விதிப்படி (Tamil Nadu Basic Service Rules) ன்படி அடிப்படையில் அடிப்படை பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்றும், இனம் 2 முதல் 6-க்கு மனுதாரர் கோரிய தகவல்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2 (f) ன்கீழ் தகவல் என்னும் வரையறையில் அமையவில்லை என்பதால் தகவல் வழங்க இயலாது என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது. திருப்தியடையாத மனுதாரர் பிரிவு 19 (1)-ன்கீழ் 09/02/2019 தேதியிட்டு முதல் மேல் முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / பதிவாளர் (பொது), சென்னை உயர்நீதிமன்றம், சென்னை அவர்களுக்கு அனுப்பி, தான் கோரிய தகவல்கள் அளிக்கப்படவில்லை என்றும், தவறான பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, சரியான தகவல்களை வழங்கக் கேட்டுள்ளார். அதன்பிறகும், தான் கோரிய தகவல்கள் வழங்கப்படாத காரணத்தால், மனுதாரர் பிரிவு 19 (3)-ன்கீழ் 21/03/2019 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை இவ்வாணையத்திற்கு அனுப்பி, தான் கோரிய தகவல்கள் அளிக்கப்படவில்லை என்றும், தவறான பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, 1 முதல் 6 இனங்களுக்கும் சரியான, முழுமையான தகவல்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார்.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு. ஓ. ஆறுமுகம், அவர்களுக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பாணை அடங்கிய அஞ்சல் உறை மனுதாரர் Deceased Returned to Sender (மனுதாரர் இறந்துவிட்டதாக) என்று அஞ்சல் துறையால் குறிப்பிடப்பட்டு இவ்வாணையத்திற்கு திருப்பப்பட்டுள்ளது.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர், மனுதாரரின் 31/01/2019 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு 05/02/2019-லிலேயே பொதுத் தகவல் அலுவலரால் எழுத்துமூல பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அதை மனுதாரரும் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், திருப்தியடையாத மனுதாரர் 09/02/2019 தேதியிட்டு தாக்கல் செய்த முதல் மேல் முறையீட்டு மனுவிற்கு சென்னை உயர்நீதிமன்ற இணைப் பதிவாளர் 18/03/2019 தேதியிட்டு திருநெல்வேலி மாவட்ட முதன்மை நீதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி, மனுதாரர் கோரிய 2, 5, 6 இனங்களுக்கான தகவல்களை மனுதாரருக்கு வழங்கிடுமாறு தெரிவித்திருந்ததாகவும், அதன் அடிப்படையில், 27/03/2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு 2, 5, 6 இனங்களுக்கான தகவல்கள் 28/03/2019 அன்று பதிவு தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அதை மனுதாரர் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்து, சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய கடிதங்களின் நகல்களை சமர்ப்பித்தார்.

5. மேற்சொன்ன ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 31/01/2019 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் கோரியிருந்த தகவல்களுக்கு 05/02/2019 மற்றும் 27/03/2019 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக ஆவணங்களின்படி இருக்கின்ற, வழங்கக்கூடிய தகவல்கள் மனுதாரருக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளன என்று ஆணையம் முடிவு செய்து, ஏற்றுக்கொள்கிறது. **மனுதாரர் திரு. ஓ.,ஆறுமுகம், அஞ்சல் அலுவலக ஊழியரின் குறிப்பின்படி இறந்துவிட்டார் என்ற காரணத்தாலும், மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி வழங்கக்கூடிய தகவல்கள் 05/02/2019 மற்றும் 27/03/2019 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளன என்ற காரணத்தாலும், மேலும் விசாரிக்க ஏதுமில்லை என்று கருதி, இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீதான விசாரணையை ஆணையம் இத்துடன் முடித்துக்கொள்கிறது.**

**ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2752/A/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்
முதன்மை மாவட்ட நீதிபதி
முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திருநெல்வேலி.

**<u>மனுதாரர்</u>**

திரு ஓ. ஆறுமுகம்
த/பெ ஒளிமுத்து
எண்.47, அசோகபுரம் தெரு
கருங்குளம்
திருநெல்வேலி - 627 356

*RS/Sr.PS 19.09.2019*